REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 30உ திங்கள் (15—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 31உ செவ்வாய் (16—8—55) [இதழ் 53

ரூ. 28 கோடியில் வடநாட்டில் மேலும் ஒரு அணைக்கட்டு திட்டம்

வடநாட்டில், மேலும் மேலும் பல இலட்சக்கணக்கான ஏகர் நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறுவதற்கான ஏற்பாடுகள் வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன.

மத்திய அரசாங்கத்திடம் பெருஞ் செல்வாக்கு பெற்று விளங்குவது என்று கருதப்படுகிற உத்திர பிரதேச மாநிலத்தில், மேலும் 7-லட்சம் ஏகர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (தொடர்ச்சி 4-ம் பக்கம்)

சென்னை சர்க்கார் 'ஆசை'யில் மண்!

சிரித்துக்கொண்டு சென்ற மந்திரிகள் அழுதுகொண்டு திரும்பிய அலங்கோலம்!

கேட்டது ரூ. 400 கோடி—கிடைத்தது ரூ. 200 கோடி!

எடுத்துச் சொன்னர்களாம்—எஜமானர்கள் கேட்கவில்லையாம்!

மந்திரி சுப்பிரமணியம் முகாரி

புதுடில்லி, ஆக. 14—

சென்னை சர்க்கார் தயாரித்திருந்த ரூ. 394 கோடி பெறுமான இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், பாதியளவாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

சுமார் ரூ. 200 கோடி அளவாகத் திட்டம் சுருக்கப்பட வேண்டுமென தேசிய திட்டக்குழு கட்டளையிட்டுவிட்டது.

திட்டத்தைச் சுமந்துகொண்டு டில்லிக்குக் காவடி தூக்கிச் சென்ற சென்னை மந்திரிகள் காமராசர், பக்தவத்சலம், சுப்பிரமணியம் ஆகியோர் முக்காடு போட்டுக்கொண்டு சுருங்கிய முகத்துடன் திரும்பிவிட்டிருக்கின்றனர்.

"எத்தனையோ எடுத்துச் சொன்னோம்; சென்னை ஏற்கனவே பின்தங்கிக் கிடக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டினோம்; 'திட்டத்தைச் சுருக்கக் கூடாது' என்பதற்கான அவசியத்தை வலியுறுத்தினோம்; என்றாலும் திட்டக்குழு, 'இருநூறு கோடிக்கு மேல் தர முடியாது' என்று கூறிவிட்டது; என் செய்வது?"

என்று முகாரி பாடியிருக்கிறார் கனம் சுப்பிரமணியம்!

"உண்மை நிலையைத் தெளிவாக விளக்கினோம்; என்றாலும், இத்தனை அளவுதான் பெற முடிந்தது" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நம்புகிறாராம்!

"என்றாலும், இன்னும் ஒரு 25 கோடி ரூபாய் அதிகமான அளவுள்ள திட்டம் நமக்குக் கிடைக்கலாம் என்று நம்புகிறேன்; திட்டம் மீண்டும் குறைக்கப்பட மாட்டாது என்பதை மட்டும் உறுதியாக நம்பலாம்,"

என்றும் மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

புதிய வரி விதிப்பாம்!

"மாநில அபிவிருத்திக்கென திட்டத்தின்படி சுமார் ரூ 80 கோடி செலவிடப்படும்; இதில் ஒரு பகுதியை, சென்னையில் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டே ஈடு செய்ய வேண்டிய அவசியமிருக்கிறது; இதில் ரூ 30 முதல் ரூ 35 கோடி வரை, மாநில வருமான வழிகளின் மூலம் (கடன் வாங்குவது போன்றவை) கிடைக்கும் பகுதி, மத்திய சர்க்கார் வழங்கும் மானியத் தொகையால் ஈடு செய்யப்படும்; எனவே, மேலும் ரூ. 5 கோடி நாம் சேகரிக்க வேண்டியவர்களாயிருப்போம்; இந்த ஐந்து கோடி ரூபாய், ஐந்தாண்டுகளில் பெற வேண்டியிருக்கும்; எனவே, ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அளவு புது வரி விதித்தாக வேண்டும் என்ற நிலை அமையும்,"

என்றும் அவர் கூறியுள்ளார்.

திருப்திதானும்—; காமராசர் கூறுகிறார்!

"நாங்கள், டில்லியில், இரண்டு நாட்களாக ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதித்து பெற்றுள்ள முடிவுகள் திருப்திகரமானவை தான்; இந்தியா முழுமைக்குமான நிலைமைகளைக் கணக்கிலெடுத்துப் பார்க்கும்போது, நாம் திட்டம் பற்றி அதிகம் குறைகூற முடியாது; மாநில நன்மைக்கான எல்லாத் திட்டங்களும் புதிய இறுதித் திட்டத்தில் இடம் பெறும்,"

என்று, டில்லி சென்று திரும்பிய காமராசர் கூறியுள்ளார்.

கோவாவில் இராணுவச் சட்டம் பிரகடனம்

விடுதலை வீரர்களை வீழ்த்த போர்ச்சுகீசியரின் முஸ்தீபு

கோவா எல்லை, ஆக. 14—

கோவா பகுதிகள் அனைத்திலும் இன்றுமுதல், இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அதனை நிர்வகிக்கும் பொறுப்புகளனைத்தும் கவர்னரின் நேரடி அதிகாரத்திற்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

போர்ச்சுகீசிய இராணுவத் துருப்புகளால் கோவா—கார்வார் எல்லை பெரும்பாலும் அடைக்கப்பட்டுவிட்டதாகவும், தற்போது, அந்த இராணுவப் படைகளனைத்தும் கோவா எல்லைக்கு சுமார் 5 கல் தொலைவு தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது.

2,000-த்திற்கும் அதிகமான தொண்டர்கள், நிராயுதபாணிகளாக பெல்காமிலிருந்து கோவா எல்லைக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனராம்; மேலும் சுமார் 1,500 தொண்டர்கள் புறப்படத் தயாராக இருக்கின்றனராம்.

சத்தியாக்கிரகிகளை அடக்குவதற்காக நிறுத்தப்பட்டுள்ள 4 புதிய இராணுவ முகாம்களும், இந்திய எல்லையில் நின்று பார்த்தாலும் தெரிகிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதனிடையே, டாமனிலுள்ள அதிகாரிகள், எல்லைப் பகுதியிலுள்ள இராணுவத்தினரிடம், சத்தியாக்கிரகிகளைப் பார்த்துச் சுடக் கூடாதென்றும், தொண்டர்களைக் கலைக்க முதலில் ஆகாயத்தைப் பார்த்து சுடவேண்டும் என்றும், அப்படியும் அவர்கள் கலைய மறுத்தால், தொண்டர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து கலைக்கவேண்டுமென்றும் உத்திரவிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு டாமன் அதிகாரிகள் இட்டுள்ள கட்டளையானது, 'தொண்டர்கள் மீது போர்ச்சுகீசிய அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அதன் விளைவாகத் தொண்டர்கள் யாரேனும் கொல்லப்படுவாரானால், அதற்கு எதிர் நடவடிக்கையாகக் கடுமையான முறைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் போர்ச்சுகீசிய அதிகாரிகள்தான் பொறுப்பாளியாவர்' என்று இந்திய சர்க்கார் விடுத்திருந்த எச்சரிக்கைக்குப் பணிந்து போய்விட்டது என்பதையே எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்ற 11-ந்தேதியன்று இரண்டு துப்பாக்கித் துருப்புகள் சுடப்பட்டன என்றும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

மேலும் சுற்றுப்புறப் பகுதியிலுள்ள கிராமங்களைக் கூட போலீசார் சூழ்ந்துகொண்டு பலரைக் கைது செய்து வருவதாகவும் தெரிகிறது.

கதர், கிராம அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட அமுல் காலத்தில் ரூ. 317.5 கோடி செலவிடுவதென அகில இந்திய கதர், கிராம அபிவிருத்திக் குழு தயாரித்திருந்த நகல் திட்டத்தை, இன்று கூடிய மாநில கதர், கிராமத் தொழில் குழுக்களின் பிரதிநிதிகள் அங்கீகரித்திருக்கின்றனராம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—25/55

தி. மு. கழகமும் நகர சபைத் தேர்தலும்

ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் அரசியல் கட்சிகள் போட்டியிட வேண்டிய அவசியமில்லை என்ற கொள்கையை ஒட்டி, வரும் நகர சபைத் தேர்தல்களில் தி. மு. கழகம் கட்சி அடிப்படையில் பங்கு கொள்ளாது.

தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்கள், கழகத்திற்கும், கழகக் கொள்கைகளுக்கும் களங்கம் ஏற்படாத வகையில், தனிப்பட்ட முறையில் வேண்டுமானல் நகரசபைத் தேர்தலில் போட்டியிடலாம்.

தி. மு. கழகத்தின் மூலாதாரக் கொள்கைகளைப் பொறுத்து மாறுபட்ட கருத்துடைய எந்த அரசியல் கட்சியோடும் தி. மு. கழகத் தோழர்கள் இணைந்து நின்றோ அல்லது கூட்டாகச் சேர்ந்தோ தேர்தலில் போட்டியிடக் கூடாது.

தி. மு. கழகத் தோழர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே யிடத்தில் போட்டியிட முனைந்தால், அந்த இடத்திற்குரிய தி. மு. கழகக் கிளை தலையிட்டுக் கழகத் தோழர்களுக்குள்ளே ஏற்படும் போட்டியைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் தி. மு கழகத் தோழர்கள், கூடுமான வரையில், கூட்டணி போன்ற அமைப்புகளில் இணைவதைத் தவிர்த்துத் தனிப்பட்ட முறையில் போட்டியிட முயலல் வேண்டும்.

கட்சி ஆதிக்கத்தை எதிர்க்கக் கூட்டணி எங்கேயாவது அவசியப்படுமாயின், போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், போதுமான விளக்கம் தந்து, அதற்கான தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெறலாம். கூட்டணி, தனிப்பட்ட முறையில் போட்டியிடுபவர்களின் கூட்டணியாக இருக்க வேண்டுமே ஒழிய, கட்சிகளின் கூட்டணியாக இருக்கக் கூடாது.

எந்தத் தி. மு. கழகக் கிளையும், 'தேர்தலில் யாருக்கு வாக்கு அளிப்பது' என்று முடிவு எடுக்கக்கூடாது. வாக்கு அளிப்பது என்பது, அவரவர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு விடப்பட வேண்டியதொன்றாகும். பொதுவாக, கட்சியின் பெயரால் போட்டியிடுபவர்களுக்கு ஆக்கந் தர வேண்டாம்.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் தி. மு. கழகத் தோழர்கள், கழகத்தின் கொள்கைகளுக்கு ஊறு ஏற்படாத வகையிலும், மேலே கூறப்பட்ட கருத்துக்களுக்கு மாறுபடாத வகையிலும், தனிப்பட்ட முறையில் பணியாற்ற வேண்டும்.

"அறிவகம்," சென்னை 13-8-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை ஆட்சியைவிட பம்பாய் ஆட்சி மேலானதாம்

சொந்தக் குலத்தவரிடையே ஆச்சாரியார் பிரலாபம்!

பம்பாய், ஆக. 13—

"உங்களுக்கு இங்கே ஒரு நல்ல அரசாங்கம் இருக்கிறது; நீங்கள் அதிருஷ்டசாலிகள்; நீங்கள், உங்கள் நாட்டின் சொந்தப் பகுதியிலேயே இருந்திருந்தால், இதைப்போன்ற ஒரு நல்ல அரசாங்கம் உங்களுக்குக் கிடைத்திருக்காது,"

—என்று, பம்பாய்—மாதுங்கா பகுதியில் வாழும் தென்னிந்தியர்கள் (பெரும் பகுதி பார்ப்பனர்கள்) கூட்டமொன்றில் பேசுகையில், இராசகோபாலாச்சாரியார் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"நான் இப்படிக் கூறுவது விவேகமானதுதானு என்று உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம்; நான் பேசுவது பத்திரிகையில் பிரசுரமாகாதா?—அப்படிப் பிரசுரமாகும்போது சிலருக்கு அது அதிருப்தியைத் தாராதா?—என்று கூ

(4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—8—'55 திங்கள்

'ஆதிக்கபுரி'யில் விடுதலை வீரர்கள்!

எதிர்பார்க்கிறபடி ஏற்பாடுகள் பூர்த்தியாகுமானல், இன்று கோவா எல்லைக்குள், இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் அணி வகுக்கப்பட்டுள்ள போராட்ட வீரர்கள் சுமார் மூவாயிரம் பேர் நுழைவார்கள்.

இன்று, ஆகஸ்டு 15—இந்த நாளில்தான், வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள், இந்தியத் துணைக்கண்டம் முழுமையிலும் தங்களுக்கிருந்த ஆதிக்க அதிகாரப் பிடியைத் தளர்த்திக் கொண்ட நாள்!

இந்தியத் துணைக் கண்டத்தைவிட்டு வெள்ளை ஏகாதிபத்தியம் வெளியேறிய இந்த நாள், பொதுவாக, அடிமைத் தளை அறுத்து, விடுதலை பெறத் துடிக்கும் சுதந்திர வீரர்களின் உள்ளத்தில் உற்சாகத்தை ஊட்டும் நாள் என்பதுடன், பிறநாட்டவரை அடிமை கொண்டு, அவர்கள்மீது ஆதிக்கம் புரியும் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் புத்தி புகட்டும் நாளுங்கூட என்பதில் ஐயம் இருக்க முடியாது.

"இதோ! இந்தப் பரந்த இந்திய உபகண்டத்தின் ஆதிபத்திய உரிமை எங்களிடம்தான் இருந்தது; இந்த துணைக்கண்டத்து மக்களின் உழைப்பைத் திருடவும், உழைப்பின் விளைவுகளைச் சுரண்டவும், செல்வங்களைக் கொள்ளை கொள்ளவும், 'உங்களை ஆளப் பிறந்தவர்கள் நாங்கள்' என்ற 'உரிமை' கொண்டாடவும், எங்களிடம் அதிகாரம் இருந்தது; அந்த அதிகாரத்தை நிலைநாட்ட—கொண்டு செலுத்த எங்களிடம் எத்தனையோ எண்ணற்ற அடக்குமுறைச் சாதனங்கள் இருந்தன; என்றாலும், இன்று வெளியேறுகிறோம்—இந்த மண்ணைவிட்டு; அடிமைப்படுத்தி வைத்திருந்த மக்களுக்கு சுதந்திரம் வழங்குகிறோம்; ஆதிபத்திய உரிமையை அவர்களிடமே தந்துவிடுகிறோம்!" என்று வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் அறிவித்த நாள், இந்த ஆகஸ்டு 15!

அந்த ஆகஸ்டு 15-ம் நாள், பொதுவாக, இருபதாம் நூற்றாண்டிலும், "நமக்குக் சில 'காலனி'கள் வேண்டும்; நமக்கு 'அடிமை'கள் என்றழைக்க, சில லட்சம் மக்களேனும் வேண்டும்," என்று எண்ணும் ஏகாபத்தியங்களுக்கு—குறிப்பாக போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்திற்கு, போதிக்கும் பாடங்கள் மகத்தானவை!

விடுதலை வரலாறுகளில் நிரம்பி வழியும் சுதந்திர வேட்கை கொண்டோரின் உணர்ச்சி வெள்ளம்—அந்த உணர்ச்சி வெள்ளம், கட்டுப்படுத்த இயலாமையால் பெற்ற வீரச் செயல் வடிவங்கள்—உரிமைத் தாகமெடுத்தோர் தம் உயிரையும் திரணமென மதித்துத் தாங்கிக்கொண்ட ஆதிபத்தியவாதிகளின் அடக்குமுறைக் கொடுமைகளால் பொறிக்கப்பட்ட தியாக வடுக்கள்—இவைகளையெல்லாம், போர்ச்சுகீசிய சர்க்காருக்கு நினைவுபடுத்தும் ஆற்றல் மிக்க நாள் இந்த ஆகஸ்டு 15!

கோவா விடுதலைக் கோரிக்கைக்கு இணங்க முரட்டுப் பிடிவாதமாக மறுக்கும் போர்ச்சுகீசியருக்கு, இந்த ஆண்டு ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று புத்தி புகட்ட நினைத்துத்தான் கோவா எல்லைக்குள் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் விடுதலைப் போர் புரியவிருக்கின்றனர்!

'விடுதலை வேண்டும்' என்று கோரிய மாபெரும் விடுதலை வீரர்கள் எல்லாம், 'அந்த விடுதலை—சுதந்திரம், தங்களுக்கு மட்டுமே—தங்கள் நாட்டு மக்களுக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்றெண்ணுபவர்களாயிருந்திருக்கின்றனர்,' என்பதை, கடந்த கால வரலாறு நெடுக நாம் காண முடியும்!

"மன்னன் ஆட்சி வேண்டாம்—மக்கள் ஆட்சி வேண்டும்; மன்னன் ஒருவனிடம் நம்மை ஆளும் அதிகாரம் அத்தனையையும் குவிப்பது கூடாது," என்றுகூறி, மன்னர் ஆட்சியை ஒழித்து மக்களாட்சி கண்ட பிரிட்டன், பிரான்ஸ் போன்று, 'விடுதலை' பெற புரட்சிப் பாதை சென்று, வரலாற்றில் 'சிவந்த' இடங்களைப் பெற்றிருக்கும் நாடுகள் எல்லாம், 'விடுதலை' தங்களுக்கு மட்டுமே—தங்கள் நாட்டு மக்களுக்கு மட்டுமே,' என்ற எண்ணத்தில்தானே, இருபதாம் நூற்றாண்டிலும் கூட ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் காலனிகளை வைத்துக் கொண்டிருப்பது?

'விடுதலையோடு வாழ வேண்டுமென்பது, மனித இனத்தின் முழுமைக்குமான மான உணர்வேயன்றி, எந்த ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளும் அடங்கிவிட வேண்டிய ஒன்றல்ல,' என்பதை, 'நாகரீக மிக்க நாடுகள்' என்றழைக்கப் படுபவைகள்கூட, இன்னும் உணரவில்லையே!

"விடுதலை நமக்கு மட்டும்தானே அன்றி, திராவிடர்களுக்கு ஏன் அது?" என்று எண்ணிக்கொண்டிருக்கும் வடநாட்டவர், கோவா விடுதலைக்காக மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள், ஒரு காலத்தில் திராவிடர்களின் விடுதலைக் கோரிக்கைக்கு பயன் மிகுந்த ஆதாரங்களாக அமையக் கூடியவைதான்!

கோவா விடுதலைக்காக இன்று, போர்ச்சுகீசிய ஆதிபத்தியத்திற்கு புத்தி புகட்ட எல்லைக்குள் நுழையும் விடுதலை வீரர்களின் உரிமை வேட்கை, வெற்றி பெறவேண்டுமென்று நாமும் ஆசைப்படுகிறோம்.

1949-ம் ஆண்டிலிருந்து இதுவரை, மேற்கு வங்காளம், திருவாங்கூர்-கொச்சி, சென்னை ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மொத்தம் சுமார் 4,900 பேரைக்கொண்ட 1257 குடும்பங்கள் அந்தமானில் குடியமர்த்தப் பட்டிருக்கின்றன. இக்குடும்பங்களில், 1,182 குடும்பங்கள் மேற்கு வங்காளத்திலிருந்தும், 71 குடும்பங்கள் திருவாங்கூர்-கொச்சியிலிருந்தும், 4 குடும்பங்கள் சென்னையிலிருந்தும் வந்தவையாம்!

வெள்ளம் விளைவித்த விபரீதம்!

பீகார் மாநிலத்தில் அண்மையில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதின் விளைவாகப் பல சேதங்கள் ஏற்பட்ட செய்தி நினைவிருக்கலாம்.

தற்போது, அப்பெரு வெள்ளத்தின் விளைவாக, பீகார் மாநிலத்தில் திர்ஹூத் எனும் பகுதியில் மட்டும் 30,000 வீடுகள் வெள்ளப் பெருக்கில் இடிந்துவிழுந்து, 25 பேர் நீரில் மூழ்கி இறந்தனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது. மேலும் அப்பகுதியில் மட்டுமே 13 லட்சம் ஏகர் நிலத்தில், பயிரிடப் பெற்றிருந்த அத்தனை பயிர்களும் நாசமாயிற்றாம்.

இந்த ஒரு பகுதியில் மட்டும், மேற்படி வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 30 லட்சம் என்று, அச்செய்தி மேலும் தகவல் தெரிவிக்கிறது.

சூறாவளிக் காற்றில் கதிரியக்கமா?

"சென்ற மே திங்களில் மேற்குக் கரையில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றில் சிக்கினவர்களுக்கு உடல் முழுவதிலும் எரிச்சல் ஏற்பட்டது பற்றியோ, அல்லது கடற்கரையை எதிர்நோக்கி இருந்த மரங்கள் சூறாவளிக் காற்று அடித்த சில தினங்களுக்குள் பட்டுப்போனது பற்றியோ சர்க்காருக்கு எவ்விதத் தகவலும் கிடையாது," என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

"அதன் காரணம் என்ன என்பது பற்றி சர்க்கார் அறிந்திருக்கிறதா? அப்படியானால் கதிரியக்கத்தால் ஏற்பட்ட விளைவுகள் என்பது உண்மைதானா?" என்று கேட்கப்பட்டபோது, 'சர்க்காருக்கு இது சம்பந்தமாக எவ்வித விவரமும் கிடையாது' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'எதிர்ப் போராட்டம்'

போர்ச்சுகீசிய அதிகாரிகள், இந்திய எல்லைக்குள் புகுந்து ஒரு 'எதிர்ப்போராட்டம்' நடத்த இருப்பதாக போர்ச்சுகீசிய அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறாராம்.

"கோவானியர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்; ஆனால், இந்தியர்கள்தான், கோவா காலனியில், எல்லாவிதத் தொந்தரவுகளையும் விளைவித்துக்கொண்டிருக்கின்றனர். இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதற்காக கோவனியர்கள், இந்திய எல்லையில் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும்" என்று போர்ச்சுகீசிய இராணுவத்தினர் ஒருவர், இந்திய விடுதலைக் குழு ஒன்றுக்குத் தலைமை தாங்கிச் சென்ற சன்னப்பா வாலி என்பாரிடம் தெரிவித்தாராம்.

பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்றம்

பொதுச் செயலாளர் துவக்கி வைத்தார்

சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்றத் துவக்கவிழா 11—8—55 மாலை 3–30 மணியளவில் நடைபெற்றது.

விழாவிற்கு மாணவர் தலைவர் சா அமீது தலைமை தாங்கினார்.

தோழர் மாயத்தேவன் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர் முன்னுரைக்குப்பின், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமிழ்மன்றத்தைத் துவக்கிவைத்து 'வள்ளுவர் வகுத்த வாழ் நெறி' என்ற தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் வ. இராசமனோகரன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

நகரசபைத் தேர்தல்கள்

55 நகரங்களில் நடைபெறஇருப்பது பற்றிய விவரங்கள்

சென்னை, ஆக. 12—

அடுத்து நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தல்களில், அநேகமாக மாநிலமெங்கணுமுள்ள எல்லா இடங்களிலும் சுமார் 1,448 இடங்களிலும் காங்கிரஸ் போட்டியிடவிருக்கின்றதாம்.

வரும் அக்டோபர் திங்களில், 55 நகரசபைகளுக்கு தேர்தல் நடைபெறவிருக்கிறது. கும்பகோணம் நகரசபைக்கு மட்டும், மகாமகத் திருவிழாவிற்காக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மொத்தமுள்ள 1,448 இடங்களில் 1,261 இடங்கள் பொதுத் தொகுதிகளாகும்; 96 இடங்கள் பெண்களுக்கும், 91 இடங்கள் தாழ்த்தப்பட்டோருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

நகரசபைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

முதல் பிரிவில் உள்ள 28 நகரசபைகளுக்கு அபேட்சைப் பத்திரங்கள் ஆக. 24, 25, 26 ஆகிய நாட்களில் தாக்கல் செய்யப்படும் என்றும், அவை ஆக 27-ந் தேதியன்று பரிசீலனை செய்யப்பட்டு ஆகஸ்டு 31-ந் தேதி அன்று போட்டியிடுவோரின் இறுதி பட்டியல் வெளியிடப்படும் என்றும், தேர்தல் அக்டோபர் 10-ந் தேதி நடைபெற்று, வாக்கு எண்ணுவது 11-ந் தேதி துவங்கும் என்றும் தெரியவருகிறது.

முதல் பிரிவில்—காஞ்சீபுரம், திண்டிவனம், கடலூர், தஞ்சை, மாயூரம், மன்னார்குடி, திருச்சி, கரூர், போடி, கொடைக்கானல், பழனி, ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், தேவகோட்டை, காரைக்குடி, திருநெல்வேலி, மேலப்பாளையம், உதகமண்டலம், தாராபுரம், கோபிசெட்டிப்பாளையம், மேட்டூர், ஈரோடு, பொள்ளாச்சி, இராசிபுரம், ஆரணி, குடியாத்தம், வாலாஜாபாத், வாணியம்பாடி ஆகிய நகரசபைகள் இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் பிரிவில் உள்ள 24 நகரசபைகளுக்குப் போட்டியிடுவோர், ஆகஸ்டு 30, 31, செப்டம்பர் 1—ஆகிய தேதிகளில் அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றும், பரிசீலனை செப். 2-ந் தேதி நடைபெறும் என்றும், இறுதி அபேட்சகர் பட்டியல் செப். 6-ந் தேதி வெளியிடப்படும் என்றும், அக்டோபர் 27-ந் தேதி தேர்தல் நடைபெற்று 28-ந் தேதி வாக்குகள் எண்ணப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரிவில்—செங்கல்பட்டு, திருவள்ளூர், விழுப்புரம், சிதம்பரம், நாகப்பட்டினம், திருவாரூர், ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, திண்டுக்கல், மதுரை, பெரியகுளம், சிவகாசி, அருப்புக்கோட்டை இராஜபாளையம், பாளையங்கோட்டை, குன்னூர், கோவை, உடுமலைப்பேட்டை, திருப்பூர், சேலம், ஆம்பூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய நகரசபைகள் இடம் பெற்றுள்ளன.

மூன்றும் பிரிவில் உள்ள தூத்துக்குடி, கோழிக்கோடு, தலைச்சேரி ஆகிய நகரசபைகளின் தேர்தலுக்குப் போட்டியிடுவோர் செப். 13, 14, 15 ஆகிய தேதிகளில் அபேட்சைப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், அவை செப். 20-ந் தேதியன்று பரிசீலனை செய்யப்பட்டு, அபேட்சகர்களின் இறுதிப் பட்டியல் 24-ந் தேதி வெளியிடப்படும் என்றும், தேர்தல் அக்டோபர் 27-ந் தேதி நடைபெற்று, வாக்குகள் 28-ந் தேதியன்று எண்ணப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மலேயா சர்க்கார்

சந்திக்கும் முதல் பிரச்சினை!

1500 இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம்?

கோலாலம்பூர், ஆக. 11—

'எட்டுமணி நேர வேலை' என்ற சட்டம் சரிவர அமுல் செய்யப்படாவிட்டால் இன்னும் இரண்டு வாரங்களில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும், சர்க்காருக்கு இதுபற்றி நோட்டீஸ் தரப் போவதாகவும் 1500 இரயில்வே தொழிலாளர்களைக் கொண்ட மலேயா இரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவர் ஜே. லியோ தெரிவித்திருக்கிறார்.

'தொழிலாளர்கள், ஒருநாளைக்கு 10 அல்லது 12 மணி நேரம் கூட வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்,' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த இரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால், மலேயாவின் இரயில்வே போக்குவரத்து நிலைகுன்றிவிடும் என்றும் கூறப்படுகிறது.

மந்திரி சபை பொறுப்பேற்று இரண்டு வார காலம் மட்டுமே ஆகியுள்ள மலேயா—சீன—இந்தியக் கூட்டணிக்கு, இது, முதற்பெரும் பிரச்சினையாகியுள்ளது.

தி.த.நா.கா. வழக்குகள்

திரும்பப்பெற சர்க்கார் முடிவு

திருவனந்தபுரம், ஆக. 12—

திரு—தமிழக காங்கிரசார் சென்ற ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் நடத்திய கிளர்ச்சியை ஒட்டி அவர்கள் மீது தொடரப்பட்டிருந்த வழக்குகளை திரும்பப் பெறுவது குறித்து சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

வரும் 'ஆகஸ்டு-15 சுதந்திர தின' விழாவினை ஒட்டி, இந்த வழக்குகள் திரும்பப் பெறப்படலாம் என்று முதன் மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

தி. த. நா. காங்கிரஸ் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளில் சில மைசூர் நீதிமன்றத்திலும், சில திரு-கொச்சி நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படவிருந்தன.

பேச்சுவார்த்தைகள் பலன் தருகின்றன!

திருவனந்தபுரம், ஆக. 12—

சென்னை மாநில சர்க்காரின் நிர்வாகத்தில் உள்ளடங்கிய 'போர்ட் கொச்சி'க்கு, தண்ணீர் விநியோகத்தை அதிகரிக்கவேண்டுமென்பதற்காக, சென்னை மாநில நிலவரி அமைச்சர் மாணிக்கவேலருக்கும்—திரு-கொச்சி மாநில அமைச்சர் வேலாயுதனுக்கும் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து விட்டன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'போர்ட் கொச்சி'க்கு, நாள் ஒன்றுக்கு, ஒரு லட்சம் காலன் தண்ணீர் விநியோகம் செய்ய திரு-கொச்சி மாநிலம் ஒப்புதல் தந்துள்ளதென அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். இதற்காக, எவ்வளவு தொகை கொடுப்பதென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாம்.

சென்னை மந்திரி சபைக்கு மலையாளப் பிரதிநிதி

கோழிக்கோடு, ஆக 12—

சென்னை மாநில மந்திரி சபையில், மலையாள மொழி பேசும் உறுப்பினர் ஒருவரையும் சேர்த்துக் கொள்ளச் செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மத்திய பார்லிமெண்டரி குழுவைக் கேட்டுக்கொள்வதென, திரு-கொச்சி மாநில, காங்கிரஸ் நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளதாம்.

சமாதான காரியங்களுக்கு அணுசக்தி!

பல நாட்டு விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

ரஷ்யா விபரம் தருகிறது

அணுசக்தி பற்றி ரஷ்யா நடத்திய சோதனைகளின் பலாபலன்களை, முதன்முறையாக ரஷ்யா, மேற்கத்திய நாடுகளின் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்காகத் தெரிவித்திருக்கிறது.

சமாதான காரியங்களிக்காக அணுசக்தியைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் நடைபெறும் அகில உலக விஞ்ஞானிகள் மாநாட்டிற்கு வந்திருந்த அமெரிக்கர்கள், ரஷ்யாவின் அறிவிப்பிற்குப் பின்னர், மேற்கு-கிழக்கு நாடுகளுக்கிடையே, அடிப்படை பௌதீகத்திலிருந்த அணுசக்தி திரை இப்போது விலக்கப்பட்டுவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

★

மின் அலைத் தாக்குதல் ஏற்பட்டால்......

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தகவல்

"அணுசக்தி நிலையத்திலிருந்து எதிர்பாராத விதத்தில், மின் அலைத் தாக்குதல் பெரும் அளவில் வெளிப்பட்டால், 2 கிலோமீட்டர் (1.2 மைல்) சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் அனைவரும் கொல்லப்பட்டுவிடுவர்," என்று பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கருத்தறிவித்தனர்.

ஜினீவா அணுசக்தி மாநாட்டில் அவர்கள் படித்த கட்டுரையின் சாரமாவது:—

"2 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரப் பகுதியில் வசிப்பவர்கள் 100-க்கு பாதி பேர் உயிர் தப்பலாம்; 17 கிலோ மீட்டர் (10½ மைல்) தூரத்தில் ஒரு ஆபத்தும் ஏற்படாது.

"மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க்கில், 1928-ல், ஒரு சேமிப்பு அறையிலிருந்து 8 டன் நச்சுவாயு வெளிப்பட்டு ஏற்பட்ட விபத்திலிருந்து இது தெரிய வந்திருக்கிறது அந்த சேமிப்பு அறைக்கு 300 கெஜ தூரத்திற்கருகில் இருந்த ஐவர் மாண்டனர்; சுமார் 10 மைல் தூரத்தில் வேறு ஐவர் மாண்டனர்; 30 பேருக்கு பலத்த காயமேற்பட்டது; அதற்கு 8 மைல்களுக்கப்பால் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டனர்.

"இரசாயனப் பொருள்களில் காணப்படும் நஞ்சு வாயு துரிதமாக மறைந்துவிடும்; ஆனால், மின் அலைகளின் சக்தி நீடித்திருக்கும்—அதாவது, ஒரு இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்படும் விபத்தைக் காட்டிலும், அணுசக்தி நிலைய விபத்தில் அதிக அளவு சேதம் இருக்காது என்றாலும், சுற்றுப்பக்கத்தில் வசிப்போருக்கு நீண்ட காலத்திற்கு உபாதை விளைவிக்கக் கூடும். ஆகவே அணுசக்தி நிலையங்களைச் சரியானபடி அமைத்துத் தக்க பாதுகாப்பு முறைகளை முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டும்."

ரஷ்ய விஞ்ஞானிகள் தகவல்

இரு ரஷ்ய அணுசக்தி ஊழியர்கள் மின் அலைகளால் பாதிக்கப்பட்டனர் என்பதையும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முறைகளையும் இரு ரஷ்ய டாக்டர்கள் வெளியிட்டிருக்கின்றனர்:—

"அவ்விரு ஊழியர்களும் 27, 21 வயதுடையவர்கள்; கதிரியக்கத்தால் பலமாக பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு தூக்கிவரப்பட்டனர். ஒரு பரீட்சார்த்த அணு உலையை இயக்குவதில் விதிமுறைகளை சரியாக அனுசரிக்கத் தவறிய தினாலேயே மின் அலைகளில் அவர்கள் தாக்கப்பட்டனர். சிறிது [illegible] வினை மறைந்துவிட்டதாகவும், தூக்கம் வரவில்லையென்றும், மயக்கமாக வருகிறதென்றும், குமட்டல் ஏற்பட்டிருப்பதாகவும் அவ்விருவரும் தெரிவித்தனர்" என்றும் அவர்கள் கூறிவிட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட விதங்களை விளக்கிவிட்டு, மேலும் கூறியதாவது:—

"சிகிச்சைக்கு பெனிசிலின், ஸ்டிரப்டோமைசின் போன்ற மருந்துகளும், இரத்த ஊட்ட மருந்துகளும் உபயோகிக்கப்பட்டன; பச்சை முட்டை, பால், தயிர், இறைச்சி, ஆரஞ்சு, அதிக அளவில் பானங்கள் ஆகியவை ஆகாரமாகக் கொடுக்கப்பட்டன."

அமெரிக்க விஞ்ஞானிகள் கருத்து

1952 ஜூன் 2-ந் தேதியன்று அர்கோனி (அமெரிக்கா) தேசீய ஆராய்ச்சி சாலையில் அணு உலைக்கூடம் ஒன்றில் 3 ஆண்களும், ஒரு பெண் ஊழியரும் எதிர்பாராதவிதமாக மின் அலைகளால் தாக்கப்பட்டதாக இரு அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

"திடீரென்று மின் அலை பாய்ந்ததால், அவர்களில் 3 பேர் கரி கிறமாகிவிட்டனர்; அவர்களை அடையாளம் கண்டுபிடிக்கவே விசேட சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது 20 மாதத்திற்குப் பின்னர்தான் இவர்களுடைய இரத்தக் கூறுகள் சரியான நிலைமையை அடைந்தது."

அந்தமானில் தொழிலாளர் படையிலுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 1952—53, 1953—54, 1954—55-ம் ஆண்டுகளில், முறையே 701-ம், 635-ம், 582-ம் ஆக இருந்தன என்றும், அதற்குக் குறிப்பிட்ட ஆண்டுகளில் முறையே ரூ. 3,55,946-ம், ரூ. 3,83,790-ம், ரூ. 2,99,200-ம் செலவழிக்கப்பட்டதாம்!

கழகச் செய்திகள்

புதுவை—அரியநகர் தி. மு. க. திறப்பு விழா

அரியநகர் தி மு. கழக நகரக் கிளையின் திறப்பு விழா 7—8—55 மாலை 6½ மணிக்கு தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. புதுவை டி. லோகநாதன் குழுவினரின் இன்னிசைக்குப் பின் நடைபெற்ற திறப்பு விழாவில், தோழர் வாணிதாசன் கழகக் கொடி ஏற்றிவைத்துப் பேசினார். தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கழகத் திறப்பு விழாவாற்றும் முறையில் சமுதாயம்—அரசியல்—பொருளாதாரம் ஆகியதுறைகளில் நாம் முன்னேற வேண்டிய அவசியத்தைப் பற்றி விளக்கமாகச் சொற்பொழிவாற்றினார்.

புதுவை — கோவிந்தசாலை தி. மு க. தேர்தல் கூட்டம்

4—8—55 மாலை 7 மணிக்கு, மேற்படி கிளைக் கழகத் தேர்தல் கூட்டம், தோழர் ச. சிவப்பிரகாசம் முன்னிலையில் நடைபெற்றது தோழர் வி. செல்வர்க்கரசு அவர்களைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பம்பாய் தி. மு. கழகம்

3—8—55 பிற்பகல் 3 மணியளவில் பம்பாய் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் தோழர் அன்புச்செழியன் இல்லத்தில், தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றபோது, அஞ்சல் போக்குவரத்து, முன்கூட்ட நிகழ்ச்சி ஆகியவை படித்துக் காண்பிக்கப்பட்டன. பின்னர் தோழர் எஸ் பி. பெருமாள் அவர்களது விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாநில மாநாட்டிற்குப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு ரூ 555 அனுப்பிவைக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது. மற்றும் பம்பாய் தி. மு. கழகத்திற்கென இயற்றப்பட்ட சட்ட திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன.

சித்தூர்—காந்திச்சாலை தி. மு. கழகம்

7—8—55 காலை 10-10 மணி அளவில், கழக இல்லத்தில், தோழர் பு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின்போது, மாநில மாநாட்டுக்கு கிளை, நகரக் கழகங்கள் சேர்ந்து நிதி அளிப்பதென்றும், தோழர் கேசவன் அவர்களைத் தலைவராகக் கொண்ட 'பொட்டி-ஸ்ரீராமுலு சொற்பயிற்சி மன்றம்' கிளைக் கழகத்தில் துவக்கப்பட்டதுடன், அதே கட்டிடத்தில், 'அண்ணா நூல் நிலையம்' எனும் படிப்பகமும் கிளைக் கழகச் சார்பில் திறந்து வைக்கப்பட்டது.

கடலூர் நகர தி.மு. கழகம்

7—8—55 காலை 11 மணியளவில், கடலூர் நகர தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் புலிசை இராமமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நகர கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், புதிய செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் கே. ஜி. சாமிநாதன் செயலாளராகவும், கே. இளங்கோ துணைச் செயலாளராகவும், முனுசாமி பொருளாளராகவும் மற்றும் 14 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பந்தநல்லூர் தி. மு. க.

10—8—55 மாலை, இராஜரெத்தினம் தேநீர் நிலயத்தில், தோழர் ஆர். சின்னதம்பி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வருகிற செப்டம்பர் 15-ந் தேதிக்குள் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் மற்றும் சில முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன

பாலூர்சத்திரம் தி. மு. க.

7—8—55-ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், அண்ணா அவர்கள் நெல்லை மாவட்டச் சுற்றுப்பிரயாணம் வரும்போது, கிளைக் கழகச் சார்பில் ஓர் வரவேற்பு கொடுப்பதெனவும், மேற்கொண்டு செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் தவசிமுத்து, இராமசுந்தரம், நடராசன் ஆகியோர்களைச் சேர்த்துக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை 50-வது வட்ட தி.மு.க. முதலாண்டு விழா

6—8—55 அன்று காலை 11-மணிக்கு, மேற்படி விழாவை யொட்டி, இராபர்ட்சன்பேட்டை தோழர் தட்சணாமூர்த்தி அவர்களால் சுமார் 809 ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது. மாலை 6-30 மணிக்கு தோழர் பொன் கு. கோதண்டபாணி தலைமையில் தோழர்கள் சி.பி.சிற்றரசு, கண்ணதாசன் ஆகியோர் விரிவுரையாற்றினர். உண்டியல் மூலம் வசூலான தொகை ரூ. 6—11—3-ம் மாநில மாநாட்டு நிதிக்கு அளிக்கப்பட்டது. இராபர்ட்சன்பேட்டை தி. மு. கழக அனுதாபிகளால் 50-வது வட்டக் கிளைக் கழகத்திற்கு ரூ. 30 நன்கொடையாக அளிக்கப்பட்டது.

சென்னை—சூளை தி. மு. க.

7—8—55-ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 5-ம் ஆண்டு விழா வரவு-செலவு கணக்குகளும், கழக வரவு-செலவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், முத்தையா நினைவு பள்ளியின் 3 மாத வரவு-செலவை விவாதித்து ஏற்றுக்கொண்டும், தோழர் என். வி. நடராசன் அவர்கள் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகம்

10—8—55 இரவு 8-30 மணிக்கு, தோழர் ஏ. ஜெயசீதம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், ஜூன், ஜூலை மாதத்திய வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், புதன் கிழமைதோறும் சொற்பயிற்சிக் கூட்டங்கள் நடத்தும் பொறுப்பை துணைச்செயலாளரிடம் ஒப்படைத்தும், வட்டப் பொதுமக்களிடம் கழகக் கருத்தைப் பரப்ப தோழர்கள் வி. கே. வி. சாமி, எம். எம். மாரியப்பா, அய்யாதுரை ஆகியவர்கள் அடங்கிய ஒரு பிரச்சாரக் குழு அமைத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தேசுமுகிப்பேட்டையில் தி. மு. க. துவக்கம்

24—7—55-ல், திருக்கழுக்குன்றத்தையடுத்த தேசுமுகிப்பேட்டையில், தி. மு கழகம் துவக்கப்பட்டு, தோழர் ஆ. இரத்தினவேலு அவர்களைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஊதியங்களிடை உள்ள வேறுபாடு

குறைக்கக் கோரிய தீர்மானம் தோல்வி!

புதுடில்லி, ஆக. 12—

இந்திய சர்க்கார் அலுவலகளுக்குத் தரப்படும் உயர்ந்த தொகை ஊதியங்களுக்கும், குறைந்த தொகை ஊதியங்களுக்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் குறைந்தபட்சமாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அது பற்றி ஆராய்வதற்கென ஒரு ஊதியக் குழு நியமிக்க வேண்டுமென்று, மக்கள் சபையில், காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட தனி நபர் தீர்மானம் ஒன்று சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

அது தவிர, 'சர்க்காரிலும் தனி நபர் துறையிலும் குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூ. 100 தரப்பட வேண்டும்' என்று எச். வி. காமத் என்பார் கொண்டுவந்த திருத்தமும் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

மேற்படி தீர்மானங்களை நிராகரித்துப் பேசிய ரெவினியூ அமைச்சர் எம். சி. ஷா, அத்தீர்மானம் நடைமுறையில் சாத்தியமற்றதென்றும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் நிறைவேற்றப்பட இருக்கும் இப்போது, நடைமுறைக்குச் சாத்தியமற்ற—நிறைவேற்ற முடியாத நம்பிக்கைகளைக் கொடுப்பது உசிதமல்ல என்றும், மேலும், ஊதிய உயர்வு கொடுத்தால், ஆண்டொன்றுக்கு சர்க்காருக்கு ரூ. 100 கோடி செலவு அதிகம் பிடிக்குமாதலால், அவ்வளவு பெரிய தொகையை இதற்காகச் செலவிட முடியுமா என்பதே தற்போது எதிர்நோக்கியிருக்கும் கேள்வி என்றும் கூறினாராம்.

குறைந்த ஊதியம் பெறுவோரின் நிலையை உயர்த்த சர்க்கார் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளும் என்று உறுதி கூறிய அமைச்சர் ஷா, மேற்படி தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு தீர்மானத்தைக் கொண்டுவந்த டி. சி. சர்மாவிடம் கேட்டுக்கொண்டாராம்.

அதையொட்டி, தீர்மானத்தைப் பிரரேபித்த டி. சி. சர்மா தமது தீர்மானத்தைத் திரும்பப்பெற்றுக் கொள்வதாக அறிவித்ததும், அதனை மறுத்து எதிர்க்கட்சியினர், தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று வற்புறுத்தினராம்.

கவுந்தபாடியில் பொதுச்செயலாளர்

மாபெரும் வரவேற்பு, ஊர்வலம்

கவுந்தப்பாடி, அய்யம்பாளையம் தி. மு. கழகச் சார்பில், 8-8-55-ல் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு மகத்தான வரவேற்பு தரப்பட்டது.

வழி நெடுக, வரவேற்பு அட்டைகளும், தோரணங்களும் கட்டப்பட்டு அழகு செய்யப்பட்டிருந்தது

வாத்தியங்கள் முழங்க, ஊர்வலமாக, பெரியார் மைதானத்திற்கு பொதுச்செயலாளர் அழைத்துச் செல்லப்பட்டார்.

மாலை 7 மணிக்கு, தோழர் எம். சின்னப்பன் தலைமையில் பொதுக் கூட்டம் துவங்கியது. தலைவர் முன்னுரைக்குப் பின்னர், தோழர் எஸ் அப்பாவு சிறிது நேரம் பேசியதும், பொதுச்செயலாளர் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

கவுந்தப்பாடி தி. மு. கிளைக் கழகச் சார்பில் வரவேற்பு இதழும், கைத்தறி ஆடையும், மலர் மாலையும் பொதுச்செயலாளருக்கு அணிவிக்கப்பட்டது. பின்னர், கோபிசெட்டிப்பாளையம், குன்னத்தூர், அய்யம்பாளையம் ஆகிய கிளைக் கழகங்களின் சார்பிலும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பொதுச்செயலாளர் அவர்கள், தி. மு கழகத்தின் கொள்கைகளையும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தையும் விளக்கி சொற்பொழிவாற்றினார்.

மத்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம்

சர்க்கார் ஊழியர்களுக்கு அமைச்சரின் 'ஆறுதல்!'

புதுடில்லி, ஆக. 12—

புதுடில்லியிலுள்ள மத்திய சர்க்கார் காரியாலயத்தைச் சேர்ந்த சுமார் 1000 கீழ்த்தர, உயர்தர குமாஸ்தாக்கள், தங்களுக்குத் தரப்படும் ஊதிய விகிதங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்று கோரி மத்திய உள்நாட்டு அமைச்சர் வீட்டின் முன்னர் ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

குமாஸ்தாக்களின் நலனுக்காக சர்க்கார் தங்களாலியன்றவரை பாடுபட்டு வருகிறதாகவும், தங்கள் கோரிக்கைக்காக இம்மாதிரியான ஆர்ப்பாட்டங்கள் செய்யவேண்டியது அவசியமில்லை என்றும் அமைச்சர் பந்த் மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கூறினாராம்.

அரைகுறை ஆடையுடன் சர்க்கார் ஊழியர் ஊர்வலம்

சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம்

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென மிரட்டல்

புதுடில்லி, ஆக. 13—

'ஊர்வலம் நடத்துவோம்—ஆர்ப்பாட்டம் செய்வோம்' என்று அச்சுறுத்தி வெளியிடப்படுகிற கோரிக்கைகளை சர்க்கார் பரிசீலனை செய்யும் என்று எந்தவித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடும் சர்க்கார் ஊழியர்கள் எதிர்பார்க்க முடியாது;

" 'எதிர்ப்புக் காட்டுவதற்காக, அரைகுறை உடைகளுடன் அலுவலகத்திற்கு வருவோம்' என்று கூறுவது, எல்லா சர்க்கார் ஊழியர்களின் கௌரவத்தையும் குறைக்கக்கூடியது என்பது மட்டுமின்றி, அம்மாதிரி அரைகுறை உடைகளில் வருவோரின் தனிப்பட்ட கௌரவத்திற்கே இழுக்கு தேடித்தருவதாகும்;

" முறையான உடைகள் அணிந்துகொள்ளாமல் சர்க்கார் அலுவல்களைக் கவனிக்க முற்படுவது தங்களுக்கு மட்டுமின்றி, சர்க்காருக்கே இழிவைத் தேடித்தரத்தக்கதாகும்; அத்தகு ஒரு செயல், ஒழுக்கக்கேடானதாகும்; மேலும் அந்தச் செயலில் இறங்குவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு, அவர்களது இழிவான செயல் ஆதாரமாக அமையும்"

—என்று, டில்லி மத்திய சர்க்காரில் ஊழியம் புரியும் மூன்றும் பிரிவு குமஸ்தாக்களின் சம்பள உயர்வு கோரிக்கைக்கான நேரடி நடவடிக்கை பற்றி, மத்திய உள்நாட்டிலாகா மந்திரிசபை வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

ஏற்கனவே அறிவித்திருந்தபடி சுமார் 1,000 குமஸ்தாக்கள் இன்று கால் சட்டை மட்டும் போட்டுக்கொண்டு டில்லி நகரத் தெருக்கள் வழியாக தங்கள் கோரிக்கைகளை ஒலி முழக்கம் செய்து அறிவித்த வண்ணம் ஊர்வலமாகச் சென்றிருக்கின்றனர்.

ஆக. 16-ந் தேதி முதல் அவர்கள் மேற்கொள்ளவிருக்கிற நேரடி நடவடிக்கைக்கு முன் நடத்தப்பட்ட ஊர்வலம் இது!

இப்போது மூன்றும் பிரிவு குமாஸ்தாக்களுக்குத் தரப்படும் ரூ 55—130 என்று இருக்கும் சம்பள விகிதத்தை ரூ 100—300 என்று திருத்தியமைக்க வேண்டுமென்பது அவர்களின் கோரிக்கைகளில் முக்கியமானது.

மத்திய உள்நாட்டிலாகா இது பற்றி குறிப்பிட்டுள்ளதாவது:—

"மிகக் குறைவான ஊதியம் பெறும் சர்க்கார் ஊழியரின் சம்பளத்தை உயர்த்துவது பற்றி சர்க்கார் அவ்வப்போது தொடர்ந்து கவனித்துவருகிறது; ஆனால் அதே நேரத்தில் வரி கொடுப்போர் தலையில் பெருஞ் சுமையைச் சுமத்தி பொதுப் பணத்தைப் பெருவாரியாகச் செலவிடுவதில் வரி கொடுப்போரின் நம்பிக்கையையும் கவனத்தில் எடுத்துக்கொண்டாக வேண்டும்."

உடற்பயிற்சிக் கலைக்கூடம் உருவாகுமாம்!

உடற் பயிற்சிக் கலைக்கென தேசீய நிறுவனமொன்றை ஏற்படுத்த இந்திய சர்க்கார் யோசித்து வருகிறதாம்; இது சம்பந்தப்பட்ட பிரச்சினையில், வெளியிலுள்ள எவரையும் கலந்தாலோசிக்க சர்க்கார் விரும்பவில்லையாம்.

ரூ. 28 கோடியில்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சுமார் ரூ 28 கோடி செலவில், உ. பி. சர்க்கார் சீக்கிரமே மேற்கொள்ள இருக்கும் ராமகங்கா அணைக்கட்டு திட்டத்தினால் 7 லட்சம் ஏகர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

, இந்த திட்டத்திற்கான 'சர்வே' முழுவதும் நடைபெற்றுவிட்டதாகவும், இந்த திட்டம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது

இந்த திட்டம் ஒரு பல நோக்குத் திட்டமாம். நீர்ப்பாசன வசதி மட்டுமின்றி, மின்சார உற்பத்தியும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

மேலும், பரூக்காபாத் கான்பூர், பரெய்லி, ஷாஜஹான்பூர் ஒராதாபாத், பதௌன் ஆகிய மாவட்டங்கள், ராம கங்கா நதியில் ஏற்படும் வெள்ளத்தினால் பாதிக்கப்படாமலிருக்க பாதுகாப்பளிக்கவும், திட்டம் பயன்படும் என்று கூறப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

★

ஆக. 16 மாலை 6 மணி: கோவில்பட்டி; இரவு 8½ மணி: சங்கரன்கோவில்.

17 மாலை 6 மணி: புளியங்குடி; இரவு 8½ மணி: கடயநல்லூர்.

18 மாலை 6 மணி: கீளப்பாவூர்; இரவு 8½ மணி: முக்கூடல்.

19 மாலை 6 மணி: விக்கிரமசிங்கபுரம்; இரவு 8½ மணி: வீரவநல்லூர்.

20 காலை 10 மணி: அம்மன்புரம்; மாலை 6 மணி: ஆத்தூர்; இரவு 8½ மணி: சிவத்தயாபுரம்.

21 காலை 10 மணி: பாளையங்கோட்டை; மாலை 6 மணி: தூத்துக்குடி.

பாட்னா நகரில் மேலும் குழப்பம்

துப்பாக்கிக் குண்டுகளுக்கு ஏழு பேர் பலி

தடை உத்தரவு பலன் தரவில்லை

பாட்னா, ஆக 13—

போலீசாருக்கும், ஏராளமான மாணவர்களடங்கிய கூட்டத்திற்கு மிடையே நடைபெற்ற மோதுதல்களின் விளைவாக ஆறு பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நேற்று போலீசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக பலியான ஒரு மாணவரைச் சேர்த்து இதுவரை கொல்லப்பட்டவரின் எண்ணிக்கை ஏழு என்று தெரிகிறது.

காயமடைந்த எண்ணற்றோரில் பலர் நிலை கவலைக்கிடமாக உள்ளதாம்.

நகரில் நேற்று நடைபெற்ற சம்பவங்களின் விளைவாக விதிக்கப்பட்ட 144 தடையுத்தரவையும் மதியாது, தொடர்ந்தாற்போல் அடுத்தடுத்து மக்கள் கூட்டம், நகரத்தின் முக்கிய வீதிகளை முற்றுகையிட முனைந்ததினால் போலீசார் தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப் பிரயோகம்—என்று அடக்குமுறைகளை, அள்ளி வீசியிருக்கின்றனர்.

இந்தத் தகராறுகள் எல்லாம், பீகார் தேசியக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவர், பஸ் பிரயாணத்திற்குக் கட்டணம் தர மறுத்ததின் விளைவாக எழுந்ததாகும்.

அதனை ஒட்டி, நகரில் உள்ள பல கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் ஊர்வலம், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இப்போது, தேசிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எல்லாக் கல்லூரிகளும் மூடப்பட்டு விட்டன.

போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென மாணவர்களும், பல எதிர்க் கட்சியினரும் கோரியிருக்கின்றனர்.

சர்க்காரும், அம்மாதிரி விசாரணை நடத்துவதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபமும் இருக்காது என்று தெரிவித்திருக்கின்றனராம்

போலா பாஸ்வன் என்ற பீகார் மாநில மந்திரியின் கார் ஒன்றும் ஒரு கூட்டத்தால் தாக்கப்பட்டதாம் அவர் கார்மீது வீசப்பட்ட கற்களினால் அவருக்கு, தலையிலும், நெற்றியிலும் காயங்கள் ஏற்பட்டனவாம். அவர், மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறாராம்.

இவைபோல இன்னும் பல சம்பவங்கள், பாட்னா நகரின் பல பகுதிகளில் நடைபெற்றிருக்கின்றன.

ஒரு போலீஸ் ஜீப், இரண்டு போலீஸ் லாரிகள் ஆகியவை தீ வைக்கப்பட்டிருக்கின்றன.

விசாரணை நடைபெறும்

துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்படுவார் என்று தெரிய வருகிறது.

முதன் முதலில் மாணவர்களைத் தாக்கியதாகக் கூறப்பட்ட பஸ் கண்டக்டர் வேலையினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி விவரங்களைத் தெரிவித்த பீகார் மாநில அமைச்சர் டாக்டர் சின்ஹா, மாநிலத்தில் அமைதியை நிலை நாட்டுவதில் மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைக் கோரியிருக்கிறாராம்.

'தேசீயப் போர்வையில் உலவும் வகுப்புவாதத்தை எதிர்த்தே போரிடுகிறேன்!'

'சீக்கியர்களை ஒழிக்க பஞ்சாப் சர்க்கார் முயற்சிக்கிறது'

ஐந்தரை மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மாஸ்டர் தாராசிங் முழக்கம்

அமிருதசரஸ், ஆக. 13—

பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கையுடன் இயங்கி வரும் சிரோமணி அகாலிதளத் தலைவரான மாஸ்டர் தாரா சிங்கும், மற்றொருவரான சர்தார் தல்ஜீத்சிங் என்பாரும், கி. பு. கோ. 188-வது பிரிவின்கீழ் அமிருதசரஸ் துணை நீதிபதியினால், தலா 4 மாதக் கடுங்காவல் தண்டனையும், ரூ. 400 அபராதமும் விதிக்கப் பெற்றுள்ளனர். அபராதம் கட்டத் தவறினால் மேலும் 1½ மாதம் சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது.

'பஞ்சாப் மொழிவழி மாநிலம் வேண்டும்' என்ற ஒலி முழக்கத்தை எழுப்பக் கூடாதென்று பஞ்சாப் சர்க்கார் விதித்திருந்த தடை உத்தரவை எதிர்த்து, சென்ற மே திங்கள் 10-ந் தேதி முதல் மாபெரும் கிளர்ச்சி, ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வந்ததும், அன்றே மாஸ்டர் தாராசிங் கைது செய்யப்பட்டார் என்பதும் தெரிந்ததே.

நீதிபதியால் விசாரிக்கப்பட்ட போது மாஸ்டர் தாராசிங், தங்கள் குருத்துவாராக்கள் அழிந்துவிடாமலிருக்கவும், தங்கள் மதப் பிரச்சினைகளில் 'துர் எண்ணத்'துடன் தலையிடும் அரசாங்கத்தின் போக்கினின்றும் தங்கள் மதத்தைக் காப்பாற்றவும் தங்களுக்கு 'அரசியல் அதிகாரம்' இருக்க வேண்டுமென்பதே சீக்கியர்களின் கோரிக்கை என்று கூறியுள்ளார்.

"எங்கள் குருத்துவாராக்கள் அனைத்தும், சர்க்காரினால், அரசியல் அதிகாரத்தின் பேரில் கைப்பற்றப்படுமானால், நிச்சயமாக அதனை மற்றொரு 'அரசியல் அதிகாரத்'தினாலேயே எதிர்த்து, காப்பாற்ற முடியும்," என்றும் கூறியிருக்கிறார்.

"நாங்கள் ஒரு மாகாண அடிப்படையிலேயே அரசியல் அதிகாரம் தேவை எனக் கேட்கிறோம்; சீக்கியர்களைத் தொலைத்துவிட வேண்டுமென்று சில இந்துக்கள் விரும்புகிறார்கள்; அத்தகைய இந்துக்கள்—பஞ்சாப் காங்கிரஸ், பஞ்சாபிலுள்ள பத்திரிகைகள், பஞ்சாப் சட்டசபை, மற்றும் அரசியல் அதிகாரமுடைய வட்டாரங்கள் அனைத்தையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டுள்ளார்கள்; எனவேதான், அத்தகைய இந்துக்களிடமிருந்தும் தற்காப்பு தேவை என்பதற்கவே, மாகாண அடிப்படையிலேனும் எங்களுக்கு அரசியல் அதிகாரம் தேவை என்கிறோம்.

"மேலும், பெப்சு, பஞ்சாப் ஆகியவற்றின் எல்லைகளை மறுபடியும் ஒருமுறை திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும்; இவ்வாறு நாங்கள் கோருவதற்குத் தெரிவிக்கப்படும் எதிர்ப்பே, இன வேற்றுமை உணர்ச்சிகொண்ட மக்களின் எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்க வேண்டியதாகிறது என்பதைப் புலப்படுத்தும்;

"பிரதமர் நேரு உட்பட—பல காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் மதத்தையும், அரசியலையும் எப்பொழுதும் பிரித்தே வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர்; ஆனால், இந்த அறிவுரைக்கு எதிராக, பஞ்சாப் முதன் மந்திரி, எங்களுக்குரித்தான குருத்துவாராக்கள் மேலுள்ள தங்கள் ஆதிக்க கரத்தை மேலும் வலுப்படுத்திக்கொள்ள முன்வந்திருக்கிறார்; அவ்வாறு அவர் தமக்கிருக்கும் அரசியல் அதிகாரங்களைப் பிரயோகிப்பதினாலேயே நாங்கள், எங்கள் மதத்தை அரசியலினின்றும் பிரித்து வைக்கும்படி எங்களைக் கட்டாயப்படுத்துகிறார்.

"சிரோமணி குருத்துவாரா பிரபந்தக் குழுவின் ஒப்புதல் இன்றியே, குருத்துவாரா சட்ட மசோதாக்கள் கொண்டுவந்தது, குருத்துவாரா நீதிபரிபாலனக் குழு நீதிபதி ஒருவர் நீக்கப்பட்டது ஆகிய இவைகளே குருத்துவாராக்களின் பிரச்சினைகளில் சர்க்கார் அனாவசியமாகத் தலையிடுகிறது என்பதை நிரூபிக்க போதிய — தக்க சான்றுகளாகும்."

"தேசியத்திற்கு விரோதமாக நான் போர் தொடுக்கவில்லை; ஆனால் தேசியப் போர்வையில் மூடப்பட்டு, அலங்காரமாக வெளித் தோற்றத்திற்குக் காணப்படும் சிறு மா[illegible]ங்கள் இருப்பதைத்தான் எதிர்க்கிறேன்;

"அகாலியர் பாகிஸ்தானின் ஆதரவைத் தேடுவதாகக் குற்றம் சாட்டப்படுவது நியாயமற்றது; எங்களுக்குத் தேவையான சுதந்திரத்தையும், எங்கள் உரிமையையும் காப்பாற்றிக்கொள்ள எங்கள் உயிரையே தியாகம் செய்துகொள்ளுவோமேயன்றி, பாகிஸ்தானிடமிருந்து நாங்கள் எக்காலத்திலும், எக்காரணங்கொண்டும் உதவி கோரமாட்டோம்; தற்கொலைக்குச் சமமான இந்தச் செயலை நாங்கள் மேற்கொள்ளுவதானது, அனலில் காய்ந்துகொண்டிருக்கும் தகட்டிலிருந்து, எரிந்துகொண்டிருக்கும் தீப்பிழம்புகளின் மீது குதிப்பது போலாகும்," என்றார்.

கழகக் கூட்டம்

★

சென்னை

சேப்பாக்கம், பார்த்தசாரதி நாயுடு தெருவில்

17—8—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: நீலநாராயணன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

மா. வெ. இளங்கோ

திருச்சி மாவட்டம்

உடையார்பாளையம் வட்ட தி. மு. க. கிளைச் செயலாளர்கட்கு

"19—8—55 பிற்பகல் 2 மணிக்கு, அரியலூர் வழிப் போக்கர் விடுதியில், உடையார்பாளையம் வட்டக் குழு அமைப்புத் தேர்தல், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையில் நடைபெறும்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. பி தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

17—8—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி மு கழக இல்லில், 'எது தேவை?' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்

அப்பீல் செய்கிறார்

நாகபுரி, ஆக. 13—

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரைக் கொலை செய்ய முற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப் பெற்ற பாபு ராவ் என்பவர், தமது தண்டனையை எதிர்த்து, நாகபுரி உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்து கொண்டுள்ளாராம்.

சென்னை ஆட்சியை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்களுக்கு ஆச்சரியமாகயிருக்கலாம்;

"பத்திரிகைகள் நான் கூறியதைப் பிரசுரிக்கக்கூடும்; பிரசுரிக்கட்டுமே! நான் கூறியது, உலகத்தில் சாதாரணமாக நடைபெறக் கூடிய நிகழ்ச்சிதான்!

"தனிப்பட்டவர்களுக்கு ஏற்ற முற்—தாழ்வும் இருப்பது இயற்கை; அதேபோல அரசாங்கங்களுக்கு நல்ல காலமும் உண்டு—கெட்ட காலமும் உண்டு."

தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"ஒரு அளவுக்குள்ளாகவே, பம்பாயில், தென்னிந்தியர்கள் குடியேற வேண்டும்; இல்லாவிட்டால், 'பம்பாய் குஜராத்திற்கா—மகாராஷ்டிரத்திற்கா,' என்பது போய், 'பம்பாய், சென்னைக்குச் சொந்தமானது,' என்று சிலர் கூறக்கூடும்; அது, பொறாமைக்கு இடம் தந்துவிடுவதாக அமையும்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.